# பெயர்ப்பலகைகளில் மலாய் மொழி இல்லையா?

## நடவடிக்கை எடுக்கப்படும்




கோலாலம்பூர், அக். 13-
அறிவிப்பு மற்றும் விளம்பரப் பலகைகளில் மலாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் எச்சரிக்கிறது.

பலமுறை எச்சரிக்கை விடுத்த போதிலும் அதை கண்டுகொள்ளாத நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நேற்று முகநூல் பக்கம் வெளியிட்ட செய்தியில் மாநகராட்சி மன்றம் கூறியது.

கடந்த வாரம் புக்கிட் பிந்தாங்கிலுள்ள ஜாலான் இம்பி சாலையில் பல்வேறு வர்த்தக நிறுவனங்களில் சோதனை செய்யப்பட்டது. அதன் அலுவலகங்களில் முன் வாசல்களில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பலகைகள் சோதனை செய்யப்பட்டன. மலாய் மொழிக்குப் பதிலாக பெயர்ப்பலகைகளில் மற்ற மொழிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எல்லா பெயர்ப்பலகைகள், விளம்பரப் பலகைகளில் தேசிய மொழிக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்று 1982ஆம் ஆண்டு விளம்பரச்சட்டம் கூறுகிறது. ஆனால் இந்த நிறுவனங்கள் இந்த விதிமுறைகளை பின்பற்றவில்லை.

சம்பந்தப்பட்ட அந்த அலுவலகங்களுக்கு சம்மன்களும் எச்சரிக்கை கடிதங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. அடுத்த 14 நாட்களுக்குள் அவை இந்த தவறை திருத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் கடுமையான நடவடிக்கைகளை எதிர்நோக்க நேரிடும்.

புக்கிட் பிந்தாங்கில் மட்டுமல்ல மாநகரில் மற்ற பகுதிகளிலும் இதுபோன்ற சோதனைகள் மேற்கொள்ளப்படும். பெயர்ப்பலகைகளில் மலாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்காதது தெரிய வந்தால் அதுகுறித்து பொதுமக்கள் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் மாநகராட்சி மன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.